NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 24 April 2019

# மாலிக்கி: எதிர்காலத்திற்கான பாடங்கள் நம் வரலாற்றில் உள்ளன

வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள், எதிர்காலத்திற்கான வழிகாட்டியாக அமையலாம் என்று தற்காப்பு, வெளியுறவு மூத்த துணை அமைச்சர் மாலிக்கி ஒஸ்மான் நேற்றைய நிகழ்வில் கூறினார்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் (என்யுஎஸ்), ‘பண்டைய துறைமுகங்கள்’ என்ற கருப்பொருளில் இரண்டு நாள் மாநாட்டைத் தொடங்கி வைத்த திரு மாலிக்கி இவ்வாறு கூறினார்.

“ஆசிய வர்த்தகத்தில் பழங்காலந்தொட்டே பெயர்பெற்ற துறைமுகமாக விளங்கும் சிங்கப்பூர், வரலாற்றின் பல்வேறு முக்கியக் கட்டங்களில் தவறான முடிவை எடுத்து அதன் முக்கியத்துவத்தை இழந்திருக்கலாம். அதன் இடம் ஜகார்த்தாவுக்கும் பினாங்குக்கும் இடைப்பட்ட இன்னொரு துறைமுகத்திற்குச் சென்றிருக்கலாம்,” என்று சுட்டினார் அமைச்சர்.

“தற்போது நெருக்குதலுக்கு ஆளாகியுள்ள பழைய கட்டமைப்புகள், தொடர்ந்து இயங்கவும் மேலும் திறம்படச் செயல்படவும் புதுப் புது யோசனைகள் தேவை. கிட்டத்தட்ட 2,000 ஆண்டுகளாக ஆற்றல்மிக்க துறைமுகமாக சிங்கப்பூர் தன் நிலையைத் தக்க வைத்துக்கொள்வதில் அடங்கி உள்ள பண்புகளை எதிர்காலத்திற்கும் எடுத்துச்செல்வதற்குக் கடந்த காலத்தைப் புரிந்துகொள்வது உதவும்,” என்றார் திரு மாலிக்கி.

இருநூற்றாண்டு நிறைவை முன்னிட்டு தேசிய மரபுடைமை கழகத்தின் ஆதரவில் என்யுஎஸ்சின் தென்கிழக்காசிய ஆய்வுப் பிரிவின் ஏற்பாட்டில் ‘ராஃபிள்சுக்கு முன் சிங்கப்பூர்: தொல்பொருள் ஆராய்ச்சியும் கடல்களும்’ என்ற மாநாடு நடைபெற்று வருகிறது.

கிட்டத்தட்ட 180 பேர் கலந்துகொள்ளும் இம்மாநாட்டில் 18 அனைத்துலக கல்விமான்கள் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளைப் படைக்கின்றனர்.

சிங்கப்பூர் காலனித்துவ ஆதிக்கத்தின் கீழ் வருவதற்கு முந்தைய காலகட்டம், கடல்துறை வர்த்தகக் கட்டமைப்புக்கும் சிங்கப்பூருக்கும் உள்ள தொடர்புகள் ஆகியவற்றை ஒட்டி இக்கட்டுரைகள் பொருளியல், தொழில்நுட்பம், சமூகச் சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் அமையும்.

கடல் வர்த்தகம் தொடர்பில் ஆய்வுகள் செய்யும் கல்விமான்கள் இடையே கூடுதல் ஆராய்ச்சியும் ஒத்துழைப்பும் ஏற்பட இம்மாநாடு கைகொடுக்கும் என நம்பிக்கையுடன் தெரிவித்தார் டாக்டர் மாலிக்கி.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.